வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 16 of 2021

வழக்கு சாட்சி - PW -1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. திருமூர்த்தி | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | பழனி | வயது | : | |
| கிராமம் | : | | | | |
| தாலுக்கா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 24.09.2025.

(எதிரி ஆஜர்).

**முதல் விசாரணை :** **நாள் : 24.09.2025.**

1) நான் தற்போது பல்லடம் செம்மி பாளையத்தில் குடியிருந்து கொண்டு வருகிறேன். GTN கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். கடந்த 10.03.2018 ம் தேதி சுமார் 4.00 மணிக்கு நானும் பழனிசாமி என்பவரும் எனது STAT City இருசக்கர வாகனத்தில் நான் வண்டியை ஓட்ட பழனிச்சாமியை பின்னால் உட்காரவைத்துக் கொண்டு கோவையில் இருந்து பல்லடம் செல்லும் ரோட்டில் சென்றுக் கொண்டிருந்தோம். பல்லடம் -கோவை ரோடில் கொங்கு மண்டபத்திற்கு மேற்கே உள்ள நெல்லை பேக்கரி அருகே சென்ற போது நான் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி வந்து கொண்டு நெல்லை பேக்கரியில் டீ சாப்பிடுவதற்காக சிக்கனல் காண்பித்து சென்ற போது கோவையில் இருந்து மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி வந்த சவேறா கார் அதிவேகமாக வந்து கவனக்குறைவாகவும் வந்து எனது இருசக்கர வாகனத்தின் மீது மோதியது. நாங்கள் கீழே விழுந்துவிட்டோம் எனக்கும் கை, காலில் சிராப்பு காயங்கள் ஏற்பட்டது. இடது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது எனது பின்னால் வந்த பழனிசாமியும் கீழே விழுந்ததில் தலையில்

அடிப்பட்டு காதிலும், மூக்கிலும் ரத்தரம் வந்தது. எங்களுக்கு பின்னால் வந்த நபர்கள் 108 ஆம்புலன்ஸ் மூலமாக பல்லடம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். நான் பல்லடம் அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு மேல் சிகிச்சைக்ககா கோவை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சையில் சேர்ந்தோம். சிகிச்சையில் இருந்த பழனிச்சாமி மாலை சுமார் 6.00 மணியளவில் இறந்துவிட்டாதாக கூறினார்கள். போலீசார் என்னிடம் விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **அந்த புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ 1** ஆகும். என்னிட்ம் போலீசார் புகார் வாக்குமூலம் பதிவு செய்தபோது எனது மகன் திவாகர் என்னுடன் இருந்தார். ஆஜர் எதிரி தான் விபத்தை ஏற்படுத்திய காரை ஓட்டியவர் ஆவார். போலீசார் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

மேற்படி விபத்து ஏற்பட்டதாக சொல்லப்படும் விபத்தில் ஈழப்பீடு பெற்றுக் கொண்டேனா என்றால் ஆம் தகுந்த நீதிமன்றத்தின் மூலம் பெற்றுக் கொண்டேன். நான் வண்டியில் வரும்போது 20 அடி நீளமுள்ள பைப் இருந்ததா என்றால் இல்லை. நான் வண்டியில் வரும்போழுது இருவரும் தலைகவசம் அணியவில்லை என்றால் இல்லை நான் அணிந்து இருந்தேன்.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA Digitally signed by S SAPNA Date: 2025.09.24 17:55:24 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.

வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 16 of 2021

வழக்கு சாட்சி - PW -2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. சண்முகசுந்தரம் | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | பரமசிவம் | வயது | : | |
| கிராமம் | : | | | | |
| தாலுக்கா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 24.09.2025.

(எதிரி ஆஜர்).

**முதல் விசாரணை :** **நாள் : 24.09.2025.**

1) நான் தற்போது காந்தி நகர் காளிவேளாம்பட்டியில் குடியிருந்து கொண்டு வருகிறேன். GTN கம்பெனியில் வேலை செய்து வருகிறேன் அசா.1 மற்றும் இந்த வழககில் இறந்து போன பழனிசாமியும் என்னுடன் வேலை செய்து வருந்தார். கடந்த 10.03.2018 ம் தேதி சுமார் 4.00 மணிக்கு அ.சா.1 ம் திருமூர்த்தியும், பழனிசாமியும் என்பவரும் STAT City இருசக்கர வாகனத்தில் திருமூர்த்தி வண்டியை ஓட்ட பழனிச்சாமியை பின்னால் உட்காரவைத்துக் கொண்டு கோவையில் இருந்து பல்லடம் செல்லும் ரோட்டில் சென்றுக் கொண்டிருந்தார். நான் எனது இருசக்கர வாகனத்தில் நான் சென்றுக் கொண்டிருந்தேன் அப்போது பல்லடம் -கோவை ரோடில் கொங்கு மண்டபத்திற்கு மேற்கே உள்ள நெல்லை பேக்கரி அருகே சென்ற போது திருமூர்த்தி மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி வந்து கொண்டு நெல்லை பேக்கரியில் டீ சாப்பிடுவதற்காக சிக்கனல் காண்பித்து சென்ற போது கோவையில் இருந்து மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி வந்த சவேறா கார் அதிவேகமாக வந்து கவனக்குறைவாகவும் வந்து திருமூர்த்தி ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது

மோதியது. அதில் இருவரும் கீழே விழுந்துவிட்டார்கள் திருமூர்த்திக்கும் கை, காலில் சிராப்பு காயங்கள் ஏற்பட்டது. இடது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது எனது பின்னால் வந்த பழனிசாமிக்கு கீழே விழுந்ததில் தலையில் அடிப்பட்டு காதிலும், மூக்கிலும் ரத்தரம் வந்தது. எங்களுக்கு நான் போன் பார்த்து 108 ஆம்புலன்ஸ் மூலமாக பல்லடம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தேன். திருமூர்த்தி பல்லடம் அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு மேல் சிகிச்சைக்ககா கோவை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சையில் சேர்ந்தார்கள். சிகிச்சையில் இருந்த பழனிச்சாமி மாலை சுமார் 6.00 மணியளவில் இறந்துவிட்டாதாக கூறினார்கள். ஆஜர் எதிரி தான் விபத்தை ஏற்படுத்திய காரை ஓட்டியவர் ஆவார். போலீசார் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> :

இந்த வழக்கில் நான் சொன்ன விதத்தில் சம்பவம் நடைபெறப்படவில்லை என்றாலும் இறந்து போன நபரும் வழக்கில் காயம்பட்ட நபரும் என்னுடன் பணிபுரிபவர்கள் என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA
Digitally signed by S SAPNA
Date: 2025.09.24 17:55:33 +0500

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.